**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC No.92 /2023**

**Deposition of Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | சரஸ்வதி | Taluk | |
| Husband Name | குணசேகரன் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 23.07.2025.** | | | |

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் எதற்காக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் கணவர் என்னை அடித்து கொடுமைப்படுத்தியதால் மனு தாக்கல் செய்துள்ளேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை யார் சொன்னது என்றால் நான்தான் சொன்னேன். எனக்கு எந்த தேதியில் திருமணம் நடந்தது என்றால் 03.07.2003 ல் நடந்தது. எங்கு நடைபெற்றது என்றால் கோவிலூரில் உள்ள ஒரு மண்டபத்தில் திருமணம் நடந்தது. மேற்படி மண்டபம் சிறியதாக இருந்தது என்றால் சரியல்ல. திருமணம் எளிய முறையில் நடந்தது என்றால் சரியல்ல. அந்த கால கட்டத்தில் நல்ல நிலையில் நடந்தது. என்னிடம் காட்டப்படும் ம.சா.3 புகைப்படத்தில் ஒரு திரையில் வண்ண காகிதங்கள் ஒட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய சொந்த ஊர் என்ன என்றால் கரூர் ஆகும். எங்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான்.

2) திருமணம் 1ம் எதிர்மனுதாரர் செலவில் நடந்தது என்றால் சரியல்ல. இருவரும் பாதிபாதியாக பிரித்து கொண்டோம். திருமண செலவுகள் எல்லாம் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவர்களது பெற்றோர்கள் செலவில் நடந்தது என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். 4 பவுன் நகை மட்டும் பெற்று கொண்டேன். **மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி மனுவில் என்னுடைய மகள் மகாலட்சுமியும் சேர்ந்துதான் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். மாவட்ட சட்டப்பணிகள் ஆணைகுழுவில் 28.02.2022 ம்தேதியன்று மேற்சொன்ன ஆவணத்தில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். திருமணத்தின்போது எனக்கு போடப்பட்ட நகைகள் அனைத்தையும் வாங்கி கொண்டேன் என்றும், தற்போது எதிர்மனுதாரர்களை அலைகழிக்க வேண்டுமென்றும் கூடுதலாக நகை பறிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மகள் என்னுடன் வந்துள்ளார் என்றால் சரிதான்.

3) நானும், 1ம் எதிர்மனுதாரரும் எந்த வருடத்தில் இருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் 2004 ல் இருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறோம். அவ்வப்போது சமாதானம் செய்து ஒன்றாக வாழ்வோம். பின்னிட்டு மீண்டும் பிரச்சனை செய்து துரத்திவிடுவார். நான் திருமணத்திற்கு முன்பே வேறு ஒரு நபரை விரும்பினேன் என்றும், என் பெற்றோர் வற்புறுத்தலின்காரணமாக 1ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்தேன் என்றும், அதனால்தான் திருமணத்திற்கு பின்னிட்டு நானாகவே பிரிந்து சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. திருமணம் முடிந்த அன்றே நான் , 1ம் எதிர்மனுதாரரிடம் பிடிக்கவில்லை என்றும், திருமணம் செய்யவில்லை என்றும், என் பெற்றோர் தற்கொலை செய்து கொள்வார்கள் என்று சொன்னதால்தான் நான் அவரை திருமணம் செய்ததாக சொன்னேன் என்றும் , நான்தான் பிரச்சனை செய்து பிரிந்து சென்றேன் என்றால் சரியல்ல.

4) நான்தான் என்னுடைய குழந்தையை விட்டு சென்றுவிட்டேன் என்றும், 1ம் எதிர்மனுதாரர்தான் குழந்தையை புதுரோட்டில் உள்ள ENP நர்சரி பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய குழந்தையை 1ம் எதிர்மனுதாரரின் தாயார் அஞ்சலையம்மாள் தான் வளர்த்து வந்தார் என்றால் சரியல்ல. குழந்தை என்னை கேட்டு அழுதபோது என்னை அழைத்தபோதும் நான் வேறு

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

ஒருவருடன் வாழ்ந்து வந்ததால் குழந்தையை கவனிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொந்தமாக தையல் தொழில் செய்து சம்பாதித்து என் மகளை வளர்த்தேன். நான் சொந்தமாக தையல் தொழில் செய்து சம்பாதித்து வருகிறேன் என்பது மட்டும்தான் உண்மை என்றும், என் மகளை நான் வளர்த்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

5) 1ம் எதிர்மனுதாரர் கோவிலூரில் வாழை பழக்கடை வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாழை பழக்கடை மட்டும் தான் நடத்தி வருகிறார் என்றும், மனுவில் அவர் பைனான்ஸ் செய்து வருவதாகவும் , வீடு வாடகைக்கு விட்டு வருமானம் பெற்று வருவதாகவும் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் என்ன பெயரில் பைனான்ஸ் தொழில் செய்கிறார் என்றால் அவரது அக்காவின் மகன் தான் என்னிடம் 1ம் எதிர்மனுதாரதர் பைனான்ஸ் செய்வதாக சொன்னார். 1ம் எதிர்மனுதாரர் பல வீடுகள் கட்டி வாடகைக்கு விடுகிறார் என்று சொல்லியுள்ளபோது எந்த சர்வே எண்களில் வீடுகள் கட்டியுள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் மாதம் ரூ. 2 லட்சம் சம்பாதித்து வருகிறார் என்று சொல்லியுள்ளபோது அதற்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

6) என்னுடைய குழந்தை கரூர் அரசு மருத்துவமனையில் பிறந்தது என்றால் சரிதான். என்னுடைய அம்மா என்ன வேலை செய்கிறார் என்றால் கூலி வேலை செய்து வருகிறார். திருமணத்திற்கு பின்பு 6 மாதம் கழித்து என்னுடைய அப்பா இறந்துவிட்டார் என்றால் என்னுடைய வளைகாப்பிற்கு பின்பு இறந்தார். வளைகாப்பு எங்கு நடந்தது என்றால் 1ம் எதிர்மனுதாரரின் வீட்டில் நடந்தது. எந்த தேதியில் நடந்தது என்றால் ஞாபகமில்லை. 1ம் எதிர்மனுதாரர் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் சுப்ரமணி, செல்வராஜ், கண்ணையா ஆகியோர் ஆவார்கள். மேற்படி நபர்கள் தனி தனி குடித்தனம் செய்து வருகிறார்கள் என்றால் 2 பேர் மட்டும்தான் தனித்தனியாக வாழ்கிறார்கள். 4 பேரும் தனித்தனியாக குடியிருந்து வருகிறார்கள் என்றும், வழக்கிற்காக பொய்யாக

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி 4 பேரும் ஒன்றாகத்தான் வசிக்கிறார்கள் என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வெளிய வந்து 20 வருடங்கள் ஆகிறது.

7) என்னுடைய மகள் மகாலட்சுமி விருப்பப்பட்டு திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் இல்லை. நான்தான் திருமணம் செய்து வைத்தேன். மகாலட்சுமி விருப்பப்பட்டு திருமணம் செய்து கொண்டார் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நடந்திருந்தால் திருமண பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் என்னை அடித்து துன்புறுத்தியிருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றும் நானாகவே விலகி சென்றதால்தான் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தாய்மாமன் தங்கவேல் என்றால் சரிதான். 2010ம் ஆண்டு நான் விரும்பினவரை திருமணம் செய்யவேண்டுமென்று 1ம் எதிர்மனுதாரரிடம் இருந்து விவாகரத்து பத்திரம் வாங்கி சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாருக்கு திருமலை என்பவருடன் ஏற்கனவே திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமலைக்கும், பாப்பாத்திக்கும் 19.11.2008ல் திருமண முறிவு ஏற்பட்டது என்றால் இல்லை.

8) நான் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து விவாகரத்து பத்திரம் வாங்கி சென்ற பின்னிட்டுதான் 1ம் எதிர்மனுதாரர் சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் 3ம் எதிர்மனுதாரருடன் வாழ தொடங்கினார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் குடியிருந்து வரும் வீடு கோவிலூர் தட்சண திருப்பதி தேவஸ்தானத்திற்கு கட்டுப்பட்ட இடம் என்று சொன்னால் எனக்கு தெரியாது. மேற்படி இடத்தை அரசாங்கம் 1ம் எதிர்மனுதாரரின் தாயார் அஞ்சலையம்மாள் பேரில் குடியிருப்பதற்கு மட்டும்தான் வழங்கினார்கள் என்றும், கிரையமோ, அடமானமோ செய்யமுடியாது என்று சொன்னால் எனக்கு தெரியாது.

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

என்னுடைய மகள் மகாலட்சுமி இலவச சட்டமையத்தில் கொடுத்தமனுவில் மேற்படி வீடு தேவஸ்தானத்திற்கு சொந்தமான வீடு என்றும், எழுதி கொடுக்க உரிமையில்லை என்று சொல்லிதான் மனு முடித்து வைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

9) நான் பிரிந்து வாழ்ந்ததற்கு பின்னிட்டு நான் கோவிலூருக்கு செல்லவில்லை என்றும், எதிர்மனுதாரர்கள் என்னை பல முறை அழைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் நான் வீட்டிற்கு வந்தபோது என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, அடித்து, கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் என்னை எந்த காலத்திலும் பார்க்கவில்லை என்றும், அவரை பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான சங்கதிகளை சொல்லி வழக்கில் சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் திட்டியதால் நான் மருந்து குடித்தேன் என்றும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக சொல்லியுள்ளது பொய் என்றும், அவ்வாறு ஒரு சம்பவம் நடந்திருந்தால் எந்த தேதியில் நடந்தது என்றும், எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்று சொல்லியிருப்பேன் என்றால்ச ரியல்ல. 1ம் எதிர்மனுதாரர்தான் என்னை மருத்துவமனையில் சேர்த்து ரூ. 20 ஆயிரம் செலவு செய்து சிகிச்சை செய்தார் என்றும், அவரே மருத்துவ ஆவணங்களை எடுத்து சென்றுவிட்டார்.

10) நான் என் விருப்பப்பட்ட நபருடன் தான் சேர்ந்து வாழ்வேன் என்றும், இல்லை என்றால் தற்கொலை செய்து கொள்வேன் என்றும் சொல்லி மருந்து குடித்தபோதுதான் 1ம் எதிர்மனுதாரர் என்னை மருத்துவமனையில் சேர்த்து காப்பாற்றினார் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவில் சொல்லியுள்ளதுபோல் 12 பவுன் நகை போடவில்லை என்றும், 4 பவுன்தான் போட்டோம் என்றும், அதையும் நீதிமன்றத்தின் மூலம் பெற்று கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. திருமணத்தின்போது கொடுக்கப்பட்ட சீர்வரிசைகளை திருமணமான ஒரு வருடத்திலேயே நான் எடுத்து சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. குழந்தை அரசு மருத்துவமனையில் பிறந்தது என்றும், அதற்காக ரூ. 1 லட்சம் என் தாயார்தான் செலவு செய்து பார்த்து கொண்டார் என்று சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.

11) 1ம் எதிர்மனுதாரருக்கு ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் ஏற்பட்டு ரூ. 5 லட்சத்திற்கு மேல் செலவு செய்து திண்டுக்கல் வடமலையான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும், நான்தான் அவரை பார்த்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு பக்க வாத நோய் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாதபோது அவரை கவனிக்காமல் , பணம் வேண்டுமென்று கேட்டு மனுதாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பரிகாரம் பெற்று வருகிறேன் என்றும், மீண்டும் அந்த மனு விவரங்களை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நானே 1ம் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றும், 1ம் எதிர்மனுதாரர் என்னை அடித்து துரத்தியதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ரோட்டு ஓரத்தில் வாழை பழக்கடை நடத்தி வருகிறார் என்றும், அவர் மாதம் ரூ. 2 லட்சம் சம்பாதிப்பதாக மிகைப்படுத்தி கூறியுள்ளதால் இம்மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

12) நானே 20 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருவதால் , 3 வருடங்களுக்குள் மனு தாக்கல் செய்யாததால் இந்த மனுவானது காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் , மகாலட்சுமியை தனது மகள் இல்லை என்று சொன்னதில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர் தனது ஆயுளுக்கு பின்னிட்டு மகாலட்சுமி எடுத்து கொள்ளலாம் சொல்லியுள்ளார் என்றும், அவர்தான் என் மகளை படிக்கவைத்தார் என்று சொன்னால் சரியல்ல. நடக்காத நிகழ்வுகளை குறிப்பிட்டு இந்த மனு வை தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரர்களுக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இம்மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்.